**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,திண்டுக்கல்**

**அமர்வு வழக்கு எண்.54/2022**

**அ.சா. 1 – கங்காதரண்**

**நாள்.20–03–2023**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். Crlmp. No. 758/2023 மனுவில் 24.02.2023ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அசா.1 மீண்டும் அழைத்து 1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

**1மற்றும் 2ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மலை 5.30 மணியளவில் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவரிடம் எதிரிகள் பெயரை பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. மருத்துவரிடம் 14.06.2021ம் தேதி மாலைப்பட்டி பிரிவு, தரைப்பாலம் அருகில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன். புகாரை நான் சொல்ல, சொல்ல என்னுடைய உறவினர் எழுதினார். போலீஸ்சார் விசாரணை சமயம் புகாரை யார் எழுதினார்கள் என்ற விபரத்தை நான் சொல்லவில்லை. புகாரை நான் ஒரு பக்கத்தில் கையெழுத்து போட்டுள்ளேன். புகார் எத்தனை பக்கம் கொண்டது என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் சொல்ல, சொல்ல அந்த புகார் எழுதப்பட்டது. புகார் எழுதிய பிறகு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது. பிறகு நான் கையெழுத்துப்போட்டேன். போலீஸ்சார் விசாரணை சமயம் கருப்பையாவுக்கும், சந்தோஷ்க்கும் 2 மாதத்திற்கு முன்பே முன் விரோதம் இருந்ததாக சொல்லியுள்ளேன். கருப்பையா பிளம்மிங் வேலை செய்து வந்ததாக சொல்லியுள்ளேன். சந்தோஷ் கருப்பையாவிடம் முன் பணம் பெற்றிருந்தார் என்ற விபரத்தை போலீஸ்சார் விசாரணை சமயம் நான் சொல்லியுள்ளேன். போலீஸ்சார் விசாரணை சமயம் நானும், கருப்பையாவும் சென்றுகொண்டுயிருக்கும் பொழுது சிரஞ்சீவி தகராறு செய்துகொண்டுயிருந்தார் என்று சொல்லவில்லை. எங்களிடம் சிரஞ்சீவி தகராறு செய்தார் என்று சொல்லியுள்ளேன். கருப்பையா, சிரஞ்சீவியின் பின் தலையில் கையல் அடித்து காயம் ஏற்படுத்தியதாக போலீஸ்சார் விசாரணை சமயம் சொல்லியுள்ளேன்.

முத்தனம்பட்டியிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நானும், கருப்பையாவும் சென்றதாக போலீஸ்சார் விசாரணை சமயம் சொல்லவில்லை. 2ம் எதிரி கருப்பையாவின் கையைபிடித்து கொண்டார் என்ற விபரத்தை போலீஸ்சார் விசாரணை சமயம் சொல்லியுள்ளேன். கருப்பையாவிற்கு காயம் ஏற்பட்டு பேச்சு மூச்சு இல்லாத சமயம் அங்கு யாரும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இருந்தேன். வழிப்போக்கு ஆட்டோவை பிடித்து மருத்துவமனை சென்ற விபரத்தை போலீஸ்சார் விசாரணை சமயம் சொல்லியுள்ளேன். கருப்பையாவிற்கும் சந்தோஷ்க்கும் தான் பிரச்சனை. சந்தோஷை போலீஸ்சார் விசாரணை செய்தால் சந்தோஷ்க்கும் கருப்பையாவிற்கும் என்ன பிரச்சனை என்ற விபரம் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. 14.06.2021 அன்று காலை கருப்பையாவிற்கும் சந்தோஷ்க்கும் பிரச்சனை என்று சொன்னால் சரியல்ல. சிரஞ்சீவிக்கும் கருப்பையாவிற்கும் தான் பிரச்சனை. என்னுடைய முதல் விசாரணையில் சிரஞ்சீவிக்கும் கருப்பையாவிற்கும் பிரச்சனை ஏற்பட்ட பிறகு நான் சாப்பாடு வாங்க சென்ற சமயத்தில் சந்தோஷ்க்கும் கருப்பையாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளேன். முத்தனம்பட்டியிலிருந்து நான் ஓட்டிச்சென்ற வண்டி ஆக்டிவா என்று கேட்டால் சூப்பர் XL வண்டியாகும். மேற்படி வண்டியை இந்த வழக்கில் போலீஸ்சார் கைப்பற்றியுள்ளார்கள். ஆஜர் எதிரிகளில் சந்தோஷ் எதிரியாக காட்டப்படவில்லை. நான் சொன்னது போல் சிரஞ்சீவி, கருப்பையாவை அசிங்கமான வார்த்தையால் பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு காயத்தின் காரணமாக என்னுடைய இரத்தகறை ஏற்பட்ட துணிகளை போலீஸ்சாரிடம் நான் ஒப்படைக்க வில்லை. டாக்டரிடம் ஒப்படைத்தேன். சிரஞ்சீவிக்கும் கருப்பையாவிற்கும் எந்தவித முன்விரோதமும், சண்டையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சிரஞ்சீவினால் கருப்பையாவின் வலது தோல்பட்டையில் காயம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கருப்பையாவிற்கு ஏற்பட்ட காயம் என்னால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இத்தோட செத்துதொலைடா என்று காலால் சிரஞ்சீவி எட்டி உதைக்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக சிரஞ்சீவி சொன்னதாக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கருப்பையாவிற்கு சிரஞ்சீவினால் காயம் ஏற்பட்டுயிருந்தால் நான் தடுத்திருப்பேன் என்று சொன்னால் தடுக்க சென்றதால் என்னை குத்தினார். சிரஞ்சீவியினால் கருப்பையாவிற்கும் எனக்கும், காயம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நானும், கருப்பையாவும் அளவிற்கு அதிகமான மது அருந்தி கொண்டு இருவரும் நடக்கமுடியாமல் சுயநினைவு இழந்து தடுமாறி கீழே ஊசியான கற்கல் மீது விழுந்ததால் எனக்கும் கருப்பையாவிற்கும் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>Crlmp. No. 858/2023 மனுவில் 03.03.2023ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அசா.1 மீண்டும் அழைத்து 3 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் சொல்ல சொல்ல புகாரை எழுதிய நபரின் பெயர் எனக்கு தெரியாது. ஆனால் புகாரை எழுதியது என்னுடைய உறவினர். போலீஸ்சார் எழுதவில்லை. புகாரில் கல்பனா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். அந்த கல்பனா என்னுடைய சகோதரி. நான் BA படித்துள்ளேன். நான் மருத்துவமனையில் இருந்த பொழுது நான் புகார் எழுதக்கூடிய நிலையில் இல்லை. புகாரில் முதலில் நான் கையெழுத்து போட்டேன் அதன் பிறகு சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது. 1ம் எதிரியிடம் கருப்பையா பணம் கொடுத்து நான்கு குவாட்டர் வாங்கி வரும்படி சொன்னதாக புகாரில் சொல்லியுள்ளேன். அந்த நான்கு குவாட்டர் மதுவையும் நாங்கள் அருந்தவில்லை. கோனார் ஓட்டலில் பார்சல் வாங்கிய பிறகு தான் மது அருந்தினோம். மது அருந்தும் பொழுது மதியம் 1 மணியிருக்கும். சம்பவ சமயம் சம்பவ இடத்தில் நானும், கருப்பையாவும் மட்டும் இருந்ததாக சொல்லியுள்ளேன். சம்பவத்தினால் எனக்கும் கருப்பையாவிற்கும் காயம் எற்பட்ட பிறகு வழிப்போக்கு ஆட்டோவை நிறுத்தி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்றேன். அப்பொழுது எதிரிகள் அங்கு இல்லை, ஓடிவிட்டார்கள். சம்பவ சமயம் நானும், கருப்பையாவும் மது போதையில் இருந்தோம். 3ம் எதிரி முருகேசன் கருப்பையாவின் வலது கையை பிடித்து கொண்டார். என்னுடைய முதல் விசாரணையில் எந்த, எந்த எதிரிகள் என்ன செய்தார்கள் என்ற விபரத்தை நான் சொல்லவில்லை. என்னுடைய இரத்தவகை என்ன பிரிவு என்று எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு முன்பு 3ம் எதிரி முருகேசனுக்கும், கருப்பையாவிற்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை.

**3ம் எதிரி என்னையும், கருப்பையாவையும் திட்டியதாக போலீஸ்சார் விசாரணை சமயம் நான் சொல்லவில்லை. வழக்கிற்கும் 3ம் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னல் சரியல்ல. 3ம் எதிரி சம்பவ இடத்திலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை இலலை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.03.20 17:40:21 +0530

Additional District Judge,

Dindigul.